
# இயல் 6.4 - வடிவியல்


## பயிற்சி எண் :: 6.4.1.1.B

### கோடு மற்றும் கோட்டுத்துண்டு

## கோட்டுத்துண்டு - வரையறை




ஒரு கோடு என்பது, படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது போல், இரு திசையிலும் நீண்டுகொண்டு செல்லும் ஒரு வடிவமாகும்.




ஒரு கோட்டினை இரு ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடுவது வழக்கம்.


அதை $\overleftrightarrow{AB}$ என்ற குறியீட்டின் மூலம் குறிப்பிடுகிறோம்.





ஒரு கோட்டின் ஒரு பகுதியை எல்லைகளாக வரையறுத்து அதை **கோட்டுத்துண்டு** என அழைக்கிறோம்.

அதை $\overline{AB}$ என்ற குறியீட்டின் மூலம் குறிப்பிடுகிறோம்.

## கோட்டுத்துண்டு - விரிவாக்கம்





பொதுவாக, அந்த கோட்டுத்துண்டின் நீளத்தை "$l$" "$m$" "$n$" என்பது போன்றுள்ள சிறிய ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடுவோம்.




ஒரு கோட்டுத்துண்டு இரண்டிற்கு மேற்பட்ட புள்ளிகளை தன்னுள் கொண்டும் அமையலாம்.


இரண்டிற்கு மேற்பட்ட புள்ளிகள் ஒரு கோட்டின் மீது அமைந்தால், அவை ஒரு **கோடமைப்புள்ளிகள்** என அழைக்கப்படும்.




பார்ப்பதற்கு இவ்விரண்டும் ஒன்றாக இருப்பதுபோல் தோன்றினாலும், ஒரு கோடு என்பது இரு புறமும் நீண்டு போய்க்கொண்டிருக்கும் ஒரு வடிவமாகும். ஆனால் ஒரு கோட்டுத்துண்டு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட நீளமுடைய ஒரு வடிவம் ஆகும்.


ஒரு கோட்டை கொட்டுத்துண்டிலிருந்து வித்தியாசப்படுத்திக் காண்பிப்பது அதன் இருபுறமும் உள்ள அம்புக்குறிகள் ஆகும்.

## கோடு - வகைகள்



ஒன்றோடொன்று சந்திக்காமல் இணையாக சென்றுகொண்டிருக்கும் கோடுகள் **இணை கோடுகள்** எனப்படுகின்றன.

அவை எந்த திசையிலும் அமையலாம்.




இணையாக இல்லாமல் இருக்கும் கோடுகள் எதாவது ஒரு இடத்தில் வெட்டிக்கொள்ளும்.

அக்கோடுகள் **வெட்டும் கோடுகள்** என அழைக்கப் படுகின்றன.

இங்கே காண்பிக்கப்பட்டுள்ள இரு கோடுகளும் $B$ எனும் புள்ளியில் வெட்டிக்கொள்கின்றன.

Sum & solution prepared on Friday 11th June, 2021 :: 06:17 Hrs.

All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.